DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 170/2022 Crime No. 184/2022 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW-7- ரமேஷ் | Village | |
| Father Name | சுப்பண்ணன் | Taluk | |
| Age | 49 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.08.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் அத்தானியில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 21.08.202 ம் தேதியன்று, மாலை சுமார் 06.45 மணியளவில், அத்தானி மூன்ரோடு சந்திப்பில் நின்று கொண்டிருந்தபோது அங்கு போலீசார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரி அந்த வழியாக பைக்கில் வந்தார். அவரை போலீசார் விசாரித்தனர். அப்போது எதிரி கருப்பண்ணன்கவுண்டன்புதூர் அருகில், விஜயலட்சுமி என்பவரிடமிருந்து தாலிக் கொடியை திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த வாக்குமூலத்தை போலீசார் என் முன்னிலையில் பதிவு செய்தனர். ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** திருடிய தாலிக் கொடியை முத்தூட் பைனான்சில் அடமானம் வைத்து பணம் ரூ.1,50,000/- பெற்றதாகவும், அதில் செலவு செய்தது போக மீதி தொகை ரூ.74,000/- மற்றும் தாலிக் கொடியை அடமானம் வைத்த இரசீதையும், பைக்கையும் போலீசார் கைப்பற்றுதல் மகசர் மூலம் எதிரியிடமிருந்து கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி எனக்கு சொந்தம் அல்ல. எனக்கு அவரை தெரியாது. எதிரியை கைது செய்தபோது நான் நின்றிருந்ததால் போலீசார் என்னிடம் சாட்சியாக இருக்கிறீர்களா என்று கேட்டதற்கு சம்மதம் தெரிவித்து சாட்சியாக இருந்தேன்.

எதிரியிடமிருந்து பொருட்களை கைப்பற்றிய பின்னர் போலீசார் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள் என்று சொன்னால், சரியல்ல. முதலில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர்தான் பொருட்கள் கைப்பற்றப்பட்டது.

ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் அவர்கள் வைத்திருந்த லேப் டாப்பில் டைப் செய்தார்கள். அதை எங்கு பிரிண்ட் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால், சரியல்ல. மூன்ரோடு சந்திப்பில் அய்யங்கார் பேக்கரி அருகே அவர்கள் ஜீப்பில் எடுத்த வந்த பிரிண்டரில் பிரிண்ட் எடுத்தார்கள்.

அவர்கள் பேக்கரிக்கு வெளியே ஜீப்பை நிறுத்தி பிரிண்ட் எடுத்தார்கள். யார் கைப்பற்றினார்கள் என்று எனக்கு நினைவில்லை, ஆனால் கைப்பற்றுதல் மகசரில் ஆய்வாளர் அவர்கள் கையெழுத்து வாங்கினார். நான் இரண்டு கையெழுத்துக்கள் போட்டேன். ஒன்று தட்டச்சு செய்யப்பட்ட தாள் மற்றொன்று கையால் எழுதிய தாள்.

நான் கூறுகிறேன் நீங்கள் சொன்னதுபோல் நீங்கள் சம்பவயிடத்தில் நீங்கள் இல்லை என்று சொன்னாலும், உங்கள் முன்னிலையில் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்று சொன்னாலும், அதன் தொடர்ச்சியாக எந்த வழக்குப்பொருளும் கைப்பற்றவில்லை என்று சொன்னாலும், சரியல்ல.

எதிரி எனக்கு நெருங்கிய உறவினர் என்று சொன்னாலும், அதை மறைத்து அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.